## ஃகுனூத்துடைய துஆ

1 أللّٰهُمَّ اهْدِنِي فِيمَنْ هَدَيْتَ، وَعَافِنِي فِيمَن عَافَيْتَ، وَتَوَلَّنِي فِيمَنْ تَوَلَّيْتَ، وَبَارِكْ لِي فِيمَا أَعْطَيْتَ، وَقِنِي شَرَّ مَا قَضَيْتَ، إِنَّكَ تَقْضِي وَلاَ يُقْضَى عَلَيْكَ، وَإِنَّه لاَ يَذِل مَنْ وَالَيْت، وَلاَ يَعِز مَنْ عَادَيْتَ، تَبَارَكْتَ رَبَّنَا وَتَعَالَيْتَ.

*பொருள்: எங்கள் இறைவனே, நீ யாருக்கெல்லாம் நேர்வழி காட்டினாயோ அவர்களுடன் எனக்கும் நேர்வழி காட்டுவாயாக, நீ யாருக்கெல்லாம் பாதுகாப்பும் ஆரோக்கியமும் வழங்கியுள்ளாயோ அவர்களுடன் எனக்கும் பாதுகாப்பும் ஆரோக்கியமும் வழங்குவாயாக, நீ யாரையெல்லாம் தன் பொறுப்பில் ஏற்றுக்கொண்டுள்ளாயோ அவர்களுடன் என்னையும் உன் பொறுப்பில் ஏற்றுக்கொள்வாயாக, நீ எனக்கு அளித்துள்ளவற்றில் செழிப்பும் நற்பேறும் அளிப்பாயாக, நீ விதித்துள்ளவற்றில் தீங்கிலிருந்து பாதுகாப்பாயாக, நீ எதையும் தீர்மானிக்கக்கூடியவனாக உள்ளாய், உனக்கெதிராக யாரும்எதையும் தீர்மானிக்க முடியாது, நீ யாரை ஆதரிக்கின்றாயோ அவரை யாரும் இழிவுபடுத்தமுடியாது, நீயாரை வெறுக்கின்றாயோ அவருக்கு யாரும் கண்ணியப்படுத்தமுடியாது, நீ அருள் மிக்கவன் எங்கள் இறைவனே, நீ மிகவும் உயர்வானவன் (அபூ தாவூத், திர்மிதி).*

2 أ للّٰهُمَّ أَعُوذ بِرِضَاكَ مِنْ سَخَطِكَ، وَبِمُعَافَاتِكَ مِنْ عُقُوبَتِكَ، وَأَعُوذ بِكَ مِنْكَ لاَ أُحْصِي ثَنَاء عَلَيْكَ أَنْتَ كَمَا أَثْنَيْتَ عَلَى نَفْسِكَ

*பொருள்: எங்கள் இறைவனே, நான் உன்னுடைய திருப்பொருத்தத்தின் மூலம் உன்னுடைய வெறுப்பிலிருந்து பாதுகாப்பு தேடுகிறேன், உன்னுடைய மன்னித்தருளும் பண்பின் மூலம் உன்னுடைய தண்டனையிலிருந்து உன்னிடமே பாதுகாப்பு தேடுகிறேன், நான் உன்னைப் புகழ்ந்து துதிக்கும் ஆற்றலற்றவனாக இருக்கின்றேன், நீயோ, எவ்வாறு உன்னுடைய புகழை நீயே புகழ்ந்து கூறியுள்ளாயோ, அவ்வாறே நீ புகழுக்குரியவனாய் இருக்கின்றாய் (அபூ தாவூத், திர்மிதி).*

3 أ للّٰهُمَّ إِيَّاكَ نَعْبُدُ، وَلَكَ نُصَلِّي وَنَسْجُدُ، وَإِلَيْكَ نَسْعَى وَنَحْفِدُ، نَرْجُو رَحْمَتَكَ، وَنَخَافُ عَذَابَكَ، إِنَّ عَذَابَكَ بِالْكُفَّارِ مُلْحَقٌ، أللّٰهُمَّ إِنَّا نَسْتَعِينُكَ، وَنَسْتَغْفِرُكَ، وَنُثْنِي عَلَيْكَ الْخيْرَ، وَلاَ نَكْفُرُكَ وَنُؤْمِنُ بِكَ، وَنَخضَعُ لَكَ وَنَخلَعُ مَنْ يَكْفُرُكَ

www.uzarfalahi.com

பொருள்: எங்கள் இறைவனே, நாங்கள் உன்னையே வணங்குகிறோம், உனக்காகவே தொழுகையும் சஜ்தாவும் நிறைவேற்றுகிறோம், உன் திருப்பொருத்தத்தை நாடியே முனைகின்றோம், உன்னுடைய கருணையையே நம்பியிருக்கின்றோம், உன்னுடைய தண்டனையைக்கண்டு அஞ்சுகின்றோம், உன்னுடைய தண்டனை நிராகரிப்பாளர்களை நிச்சயம் வந்தடையும், எங்கள் இறைவனே, நாங்கள் உன்னிடமே உதவியை நாடுகின்றோம், உன்னிடம் பாவமன்னிப்புக் கோருகின்றோம், உன்னைப் புகழ்ந்து துதிக்கின்றோம், நாங்கள் உன்னுடைய நன்றி மறப்பதில்லை, உன்மீதே விசுவாசம் கொண்டுள்ளோம், உன்னுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றோம், உன்னை நிராகரித்து நன்றி மறப்பவர்களுடன் எந்த உறவும் நாங்கள் வைத்துக்கொள்வதில்லை (சுனன் பைஹஃகி).

* * *

www.uzairfalahi.com